பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

**18 06 2026** **7 15**

வியாழக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. பாரீசில் நடைபெற உள்ள தொழில்நுட்ப உச்சிமாநாட்டில் பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று பங்கேற்கிறார்.

2. இணையவழி குற்றத்தடுப்பு வழிமுறைகளை உருவாக்குவதில் மத்திய அரசு உறுதியாக உள்ளது என்று உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.

3. இந்தியா-இங்கிலாந்து இடையேயான விரிவான பொருளாதார வர்த்தக ஒப்பந்தம் அடுத்த மாதம் 15ஆம் தேதி அமலுக்கு வரும் என்று இரு நாடுகளும் அறிவித்துள்ளன.

4. கம்போடியாவில் வேலை வாங்கித் தருவதாக கூறி இணையவழிக் குற்றங்களில் ஈடுபடுத்தப்பட்ட பங்களாதேஷ் நாட்டைச் சேர்ந்த 221 பேர் மீட்கப்பட்டுள்ளனர்.

5. உலகக் கோப்பை மகளிர் ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா 95 ரன் வித்தியாசத்தில் நெதர்லாந்தை வென்றது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

ஃபிரான்ஸ் நாட்டின் பாரீசில் இன்று நடைபெற உள்ள தொழில்நுட்ப மாநாட்டில் பிரதமர் திரு. நரேந்திர மோடி அந்நாட்டு அதிபர் திரு. இமானுவேல் மேக்ரோனுடன் இணைந்து பங்கேற்கிறார்.

ஐரோப்பாவின் மிகப்பெரிய தொழில்நுட்ப மற்றும் புத்தொழில் உச்சிமாநாட்டில் இந்தியாவின் வளர்ந்து வரும் புத்தொழில் சூழலையும், தொழில்நுட்ப முன்னேற்றங்களையும் பிரதமர் எடுத்துரைப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

முதலீடுகளை ஈர்க்கும் நோக்கில் ஃபிரான்ஸ் மற்றும் ஐரோப்பாவின் முன்னணி வர்த்தக தலைவர்களுடன் அவர் விவாதிக்க உள்ளார்.

அதைத் தொடர்ந்து அங்கு வசிக்கும் இந்திய வம்சாவளியினருடன் பிரதமர் உரையாட உள்ளார்.

**Evion** நகரில் தமது பயணத்தை நிறைவு செய்து, பாரீஸ் சென்றடைந்த பிரதமரை விமான நிலையத்தில் இந்திய வம்சாவளியினர் உற்சாகத்துடன் வரவேற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

முன்னதாக **Evion** நகரில் அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப்-ஐ பிரதமர் சந்தித்துப் பேசினார்.

உலகளாவிய பொருளாதாரத்திற்கு ஹோர்முஸ் நீரிணையை திறப்பது முக்கிய நடவடிக்கை என்று அப்போது அவர் கூறினார்.

தடையற்ற வகையில் கப்பல் போக்குவரத்து நடைபெறுவதை உறுதி செய்ய வேண்டும் என்று பிரதமர் வலியுறுத்தினார்.

கடல்சார் வர்த்தகத்திற்காக லட்சக்கணக்கான இந்திய மாலுமிகள் உலகின் பல்வேறு பிராந்தியங்களில் சேவையாற்றி வருவதாக கூறினார்.

மாலுமிகளின் பங்களிப்பு குறித்து குறிப்பிட்ட பிரதமர், அவர்களுடைய பாதுகாப்பு மிகவும் முக்கியமானது என்று தெரிவித்தார்.

மேற்காசியாவில் அமைதிச் சூழலை ஏற்படுத்துவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டதற்காக திரு. ட்ரம்ப்புக்கு அவர் பாராட்டு தெரிவித்தார்.

<<<<>>>>

இணையவழி குற்றத்தடுப்பு வழிமுறைகளை உருவாக்குவதில் மத்திய அரசு உறுதியாக உள்ளது என்று உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற உயர்மட்டக் கூட்டத்தில் தேசிய இணையவழிக் குற்ற தடுப்புக்கான 1930 என்ற உதவி எண் சேவை குறித்து அவர் ஆய்வு செய்தார்.

அந்த உதவி எண் சேவை முறையை சீரமைக்குமாறு அதிகாரிகளுக்கு அவர் அறிவுறுத்தினார்.

செயற்கை நுண்ணறிவு உள்ளிட்ட புதிய தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி இந்த உதவி எண் சேவை அமைப்பை நவீனப்படுத்துமாறு அவர் கூறினார்.

இணையவழிக் குற்றங்களில் இருந்து மக்களுக்கு உடனடி நிவாரணம் வழங்க அமைக்கப்பட்டுள்ள பல்வேறு வழிமுறைகள் குறித்து கூட்டத்தில் அவர் ஆய்வு செய்தார்.

போதிய அளவிலான மனிதவளத்துடன் அழைப்புகளை கையாளும் திறன் கொண்ட தேசிய அளவிலான 1930 அழைப்பு மையத்தை அமைக்குமாறும் திரு. அமித் ஷா உத்தரவிட்டார்.

<<<<>>>>

இந்தியா-இங்கிலாந்து இடையேயான விரிவான பொருளாதார வர்த்தக ஒப்பந்தம் அடுத்த மாதம் 15ஆம் தேதி அமலுக்கு வரும் என்று இரு நாடுகளும் அறிவித்துள்ளன.

இதுகுறித்து தெரிவித்துள்ள மத்திய வர்த்தகம் மற்றும் உள்துறை அமைச்சகம், சமூக பாதுகாப்பு ஒப்பந்தமும் அதேநாளில் அமலுக்கு வரும் என்று கூறியுள்ளது.

இது இந்தியாவின் தற்காலிக தொழிலாளர்களுக்கு பெரும் பயனளிக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையே, இந்த ஒப்பந்தங்களின் மூலம் இந்திய ஏற்றுமதிக்கு புதிய வாய்ப்புகள் ஏற்படும் என்றும், இந்தியா மீது விதிக்கப்பட்டிருந்த வரிகளில் 99 சதவீதம் அளவிற்கு வரிவிலக்கு கிடைக்கும் என்றும் மத்திய வர்த்தக அமைச்சர் திரு. பியூஷ் கோயல் கூறியுள்ளார்.

இந்த ஒப்பந்தம் குறித்து கருத்து தெரிவித்துள்ள பிரதமர் திரு. நரேந்திர மோடி, இந்தியா - இங்கிலாந்து நாடுகளுக்கு இடையேயான விரிவான பொருளாதார வர்த்தக ஒப்பந்தம், இருதரப்பு வர்த்தகம் மற்றும் முதலீட்டுக்கு பெரும் ஊக்கமளிக்கும் என்று கூறியுள்ளார்.

இதுகுறித்து சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள அவர், விவசாயிகள், தொழிலாளர்கள், சிறு குறு மற்றும் நடுத்தர தொழில்துறையினர், புத்தொழில் நிறுவனங்கள், புதுமைக்

கண்டுபிடிப்பாளர்கள் ஆகியோருக்கு அதிக வாய்ப்புகள் கிடைக்கும் என்று குறிப்பிட்டுள்ளார்.

<<<<>>>>

நாட்டில் நடப்பாண்டு இறுதிக்குள் 300 ஜிகாவாட் அளவிலான புதைபடிவமற்ற எரிபொருள் உற்பத்தி செய்யப்படும் என்று புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி துறை அமைச்சர் திரு. பிரல்ஹாத் ஜோஷி தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் உரையாற்றிய அவர், உலகின் மிக விரைவான மிகப்பெரிய தூய்மை எரிசக்தி மாற்றங்களில் ஒன்றை இந்தியா கொண்டுள்ளதாக அவர் கூறினார்.

கடந்த 12 ஆண்டுகளில் எரிசக்தி மாற்றத் துறையில் இந்தியா உலகளாவிய தலைமைத்துவமாக உருவெடுத்துள்ளதாகத் தெரிவித்தார்.

தேசிய பசுமை ஹைட்ரஜன் இயக்கம் குறித்து குறிப்பிட்ட அமைச்சர், பசுமை ஹைட்ரஜன் தொழில்நுட்பங்களில் புத்தொழில் நிறுவனங்களுக்கு ஆதரவளிக்க 100 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதாக கூறினார்.

இத்துறையில் 8 லட்சம் கோடி ரூபாய் முதலீட்டை ஈர்ப்பது, 6 லட்சம் வேலைவாய்ப்புகளை உருவாக்குவதை நோக்கமாக கொண்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

ஆண்டுக்கு 50 மில்லியன் டன் கார்பன் வெளியீட்டைக் குறைப்பதும் தேசிய பசுமை ஹைட்ரஜன் திட்டத்தின் நோக்கம் என்று திரு. பிரல்ஹாத் ஜோஷி கூறினார்.

<<<<>>>>

E-20 ரக பெட்ரோலைப் பயன்படுத்தும் வாகனங்களின் எரிபொருள் மூடிகளை சுற்றி எறும்புகள் மொய்ப்பதாக வரும் தகவல் தவறானது என்று பத்திரிகை தகவல் அலுவலகம் தெரிவித்துள்ளது.

E-20 ரக எரிபொருளில் எறும்புகள் மற்றம் பிற பூச்சிகளை ஈர்க்கும் தன்மை ஏதும் கிடையாது என்றும், அறிவியல் ரீதியாக உண்மையில்லை என்று அது கூறியுள்ளது.

<<<<>>>>

தமிழக சட்டப்பேரவைக் கூட்டத்தொடர் இன்று தொடங்குகிறது.

தவெக தலைமையிலான புதிய அரசு பதவியேற்றபின் நடைபெறும் முதல் கூட்டத்தொடர் என்பதால் ஆளுநர் திரு.

ராஜேந்திர விஷ்வநாத் அர்லேகர் உரையுடன் கூட்டத்தொடர் தொடங்குகிறது.

ஆளுநர் உரையின் தமிழாக்கத்தை சட்டப்பேரவைத் தலைவர் திரு. ஜே.சி.டி. பிரபாகர் வாசிப்பார்.

அரசு நலத்திட்டங்கள், கொள்கைகள் குறித்து ஆளுநர் உரையில் இடம்பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பின்னர் அலுவல் ஆய்வுக் குழு கூடி கூட்டத்தொடரை எத்தனை நாட்கள் நடத்துவது என்பது குறித்து முடிவு செய்யப்படும்.

<<<<>>>>

கம்போடியாவில் வேலை வாங்கித் தருவதாக கூறி இணையவழிக் குற்றங்களில் ஈடுபடுத்தப்பட்ட பங்களாதேஷ் நாட்டைச் சேர்ந்த 221 பேர் மீட்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் 78 பேர் நேற்று முன்தினம் இரவு டாக்கா வந்தடைந்த தாக அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது.

உரிய வேலைவாய்ப்பை வாங்கித் தருவதாக கூறி தங்களை இணையவழிக் குற்றங்களில் ஈடுபட கம்போடியாவில் கட்டாயப்படுத்தப்பட்டாக மீட்கப்பட்டவர்கள் தெரிவித்துள்ளனர்.

கடந்த ஒன்றரை ஆண்டுகளில் சுமார் 16 ஆயிரம் பேர் பங்களாதேஷில் இருந்து கம்போடியாவுக்கு வேலைவாய்ப்புக்காக சென்றுள்ளனர்.

அவர்களில் பலருக்கு குறுகிய கால பயண விசா மட்டும் வழங்கப்பட்டதாகவும், வேலை அனுமதிக்கான விசா வழங்கப்படவில்லை என்று கூறப்படுகிறது.

பங்களாதேஷை சேர்ந்த ஆயிரக்கணக்கானவர்கள் தற்போதும் வேலையின்றி கம்போடியாவில் வசிப்பதாகவம் அவர்கள் பெரும் சிரமத்திற்கு ஆளாகியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

நாட்டின் வடகிழக்குப் பகுதிகளில் இன்று கன முதல் மிக கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தமிழ்நாடு, பிஹார், கேரள மாநிலங்கள் மற்றும் புதுச்சேரி யூனியன்பிரதேசத்தின் சில பகுதி கனமழை பெய்யக்கூடும் என்று தெரிவித்துள்ளது. தெலங்கானா, ஒடிசா, ஜார்கண்ட், பிஹார் மற்றம் சத்தீஸ்கட் மாநிலங்களில் அடுத்த 4 அல்லது 5 நாட்களில் தென்மேற்கு பருவமழை தொடங்க வாய்ப்புள்ளதாக கூறியுள்ளது.

தில்லி, ஹரியானா, சண்டிகர், பஞ்சாப், உத்தராகண்ட் மாநிலங்களில் அடுத்த **2** நாட்களுக்கு பலத்த காற்று வீசக்கூடும் எனறும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

ரியாஸ்-ஹா ஏர்நெட்-**9**

<<<<>>>>

உலகக் கோப்பை மகளிர் ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா **95** ரன் வித்தியாசத்தில் நெதர்லாந்தை வென்றது.

லீட்சில் நடைபெற்ற இப்போட்டியில் முதலில் பேட் செய்த இந்தியா நிர்ணயிக்கப்பட்ட **20** ஓவரில் **5** விக்கெட் இழப்புக்கு **209** ரன் எடுத்தது.

ஸ்மிருதி மந்தனா **74** ரன்னும், ஷஃபாலி வர்மா **55** ரன்னும் எடுத்தனர்.

**210** ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய நெதர்லாந்து **17** புள்ளி **3** ஓவரில் **114** ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

இந்திய அணியின் பந்துவீச்சாளர் ஸ்ரீ சரணி **4** விக்கெட் வீழ்த்தினார்.

------------

ஆஃப்கனிஸ்தான் அணிக்கு எதிரான இரண்டாவது ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இந்தியா **170** ரன் வித்தியாசத்தில் வெற்றி பெற்று தொடரைக் கைப்பற்றியது.

லக்னோவில் நடைபெற்ற இப்போட்டியில் முதலில் பேட் செய்த இந்தியா **49** புள்ளி **5** ஓவரில் **402** ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

**403** ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் களமிறங்கிய ஆஃப்கனிஸ்தான், **44** புள்ளி **3** ஓவரில் **232** ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

-----------

ப்ரோ ஹாக்கி லீக் போட்டியில் இந்தியா **3-1** என்ற கோல் கணக்கில் ஜெர்மனியை வென்றது.

-----------

மக்காவ் ஓபன் பேட்மிண்டன் போட்டியின் ஆடவர் பிரிவில் இந்தியாவின் தருண் மனப்பள்ளி, **Rounak Chauhan** ஆகியோர் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

மகளிர் பிரிவில் இஷாராணி பருவா, அஷ்மிதா சாலிகா காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

**<<<<The End>>>>**